
உடல் பொய்யுறவா?
தாயுமானவர்
மன்னார்குடி பானுகுமார்
ராஜம் பதிப்பகம்

---

# உடல் பொய்யுறவா? தாயுமானவர்.

## (தாயுமானவரின் பார்வையில் உடல்)

மனிதன் என்பவன் உடல், உயிர்ச்சக்தி, விந்து நாதம்? ஜீவகாந்தம், மனம் என்ற ஐந்தும் ஒருசேர இயங்கும் அமைப்பேயாகும். இதனை வேதாத்திரி மகரிசி,

"உடல்,உயிர், ஜீவகாந்தம், கருமையம் மூளை,

உள்ளம், மனம், புலன் எட்டு இணைப்பியக்கம் ஜீவன்...."

இந்த உடலை ஒரே கோர்வையாகத்தான் பார்க்கிறோம். உண்மையில் ஒரே கூட்டமாக இல்லை.

பல்லாயிரம் செங்கற்கள் சேர்ந்துதான் வீடாக இருகிக்கிறது. ஆனால் அந்தச் செங்கற்களைப் பார்ப்பது இல்லை. அதை வீடு என்றுதான் பார்க்கிறோம்.

அதேபோல்தான் செல்கள் கோடானுகோடி செல்கள் சேர்ந்து இருமுனை, அதாவது ஒரு முனையில் கொள்ளும் சக்தி, இனனொரு முனையில் தள்ளும் சக்தி, தள்ளும் சக்தியை விடுப்பான் (Repulsive force) என்றும் கொள்ளும் சக்தியை அடைப்பான் (Value action) என்றும் கூறுவர்.

ஆக, ஒவ்வொரு செல்லுக்கும் முனையில் அதைத் துருவ இணைப்பு ( Polarisation) இருக்கிறது.

---

நம் உடலில் உள்ள காந்த சக்தி ஓட்டத்தில் ஒவ்வாரு செல்லுக்கும் இரண்டு துருவ முனைகளை (Polarity) ஏற்படுத்திக் கொள்ளும். ஒன்றோடு ஒன்று ஈர்த்துப் பிடித்துக் கொண்டு இருப்பதனால் ஒரே கட்டடமாகத் தெரிகிறது.

ஆனால், ஒவ்வொரு செல்லும் தனித்தனியாகப் பார்த்தால் ஒவ்வொன்றும் ஒரு ஜீவராசியைப் போலத்தான் இருக்கும்.

அதற்குள் நடக்கக்கூடிய இயக்கங்களை எல்லாம் பார்த்தால் ஒரு தொழிசாலை என்று சொல்லலலாம்.

ஒவ்வொரு செல்லும், தனக்கு உரியதை வாங்கி, இந்த உடலுக்கு என்ன மாதிரியான இரசாயன தேவை எந்த மாதிரியான மின்சக்தி அளவு தேவை என்று - அதை எல்லாம் உற்பத்தி செய்து- அனுப்பிக் கொண்டே இருக்கக்கூடிய தொதழிசாலைத்தான், நம் உடலில் உள்ள ஒவ்வொரு செல்லும்.

அத்தகைய செல்கள் நிறைந்ததுான் இந்த உடல். ஜீவகாந்த சக்தி விரைவாக ஓடிக் கொண்டே இருக்கிறது.

அப்படி ஓடிக் கொண்டே இருக்கும்போது அந்தந்த செல்லுக்கு வேண்டிய காந்த சக்தி இழுத்து, தன்மாற்றம் பண்ண வேண்டும். இவ்வாறு நம் உடல் இயக்கம் நடைபெற்று வருகிறது.

“பரு உடலே அணுத்திரள்கள் அடுக்கு ஆகும்


பதமாக அதைக்காக்கும் ஜீவ காந்தம்”

என்பார் வேதாத்திரி மகரிசி.

---

**அந்த உடல் பற்றிய தாயுமானவரின் எண்ணங்கள், இறையை மெய்ப் பொருளாகக் காட்டுவதால், உடலைப் பொய்ப் பொருளாகக் காட்டுகின்றன.**

**இந்த உடலை நாம் எப்பொழுதும் பார்த்துக் கொண்டே இருக்கின்றோம்.**




**இந்த உடல் முதலில் அணு போன்றிருந்தது. இன்று இந்த நிலைக்கு ஐந்தரை அடி உயரமும் 38 அங்குலம் அகலமுடைய மார்பையும் கொண்டு இயங்குகிறது.**

**உடல் சிறுவயது முதல் வளர்ந்து கொண்டிருக்கின்றது. உலக உயிர்கள் அனைத்தின் உடல்களும் ஒருநிலைவரை வளருகின்றன.**

**குறுக்காக வளருகின்ற உடல்கள் இருக்கின்றன. மேல் நோக்கி வளருகின்ற உடல்களும் உள்ளன. குறுக்கே வளரும் உடலையுடைய உயிர்களை விலங்கு என்கிறோம்.**

---

**ஏற்கேனவே கூறியதன்படி, இந்த உயிருக்குப் பாதுகாப்பாக இந்த உடல் அமைந்துள்ளது.**

**குழந்தை பிறந்த ஒரு மாதத்தில், ஒரு மீட்டர் துணியில் 12 சட்டை தைக்கும் நிலையில்தான் உடல் உள்ளது. இன்று 3 மீட்டர் தேவைப்படுகின்றது. ஒரு சட்டைக்கு இது உடல் வளர்ச்சி.**

**இதனுள் ஐம்புலன்கள் வழியில் வளர்ந்த அறிவு வளர்ச்சியும், உடல் வளர வளர வளர்ந்து கொண்டிருக்கின்றது,**

**ஒரு நிலை வரை ஆயின் இந்த ஐம்புலன்களையும் அளவற்றது அறிவையும் பகுத்து அறியும் பகுத்தறிவு அதன் பக்குவத்திற்குத் தலைசிறந்த இடத்தைப் பெறுகின்றது.**

**“எண்ணறிய பிறவிதனில் மானிடப் பிறவிதான்**

**யாதனினும் அரிதுஅரிது காண்**

**இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ**

**எதுவருமோ அறிகிலேன்…”**

**இம் மானிட உடல் பெறுகின்ற உயிர், நல்ல உயிரே. நல் பிறவியே. பல் பிறவிகள் உண்மையை வள்ளுவமும் ஏற்றுக் கொள்கின்றது.**

**“பிறவிப் பெருங்கடல்” “எழுமை ஏழுபிறப்பும்” “எழுபிறப்பும் தீயவை தீண்டா”. இவ்வாறு வருகின்ற பிறவியை அறுத்தற்கு இந்த உடல் இருக்கும் போதே அவ்வுடலைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பது சான்னோர் கருத்து. பட்டினத்தார் பிறப்பறுத்தல் வேண்டுமென் இவ்வாறு பாடுகிறார்.**




"மாதா உடல் சலித்தாள் வல்வினையேன் கால்சலித்தேன்

வேதாவும் கைவலித்து விட்டானே - நாதா

இருப்பையூர் வாழ்சிவனே இன்னுமோர் அன்னைக்

கருப்பையுள் வராமல் கா."

மனிதப் பிறவி, மனம் நினைவு இவற்றை உடைய பிறவி, தொடர்ச்சியாக எண்ணுகின்ற ஆற்றல் ஏனைய உயிர்களுக்கு இல்லை.

"ஆன்மா" மனிதப் பிறவிக்கு மட்டுமே உரியது என்பது பொதுக் கருத்து. அத்தகைய இப்பாத்திரமான உடலை எவ்வாறு பேண வேண்டும். எவ்வாறு வைத்துக் கொள்ளுதல் வேண்டும் என்பது பெரும் கேள்விகளாக அமைகின்றன.

நாம் நம் உடலை எவ்வெவ்வாறாக எல்லாம் புறநிலையில் பேணுகின்றோம் என்பதே நமக்குத் தெரியும். இதனைத் திருமூலர் மிகச் சிறப்பாக எடுத்துக் கூறியுள்ளார்.




"உடம்பார் அழியின் உயிரார் அழிவர்

திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்

உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே

உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே" (திருமந்திரம்)

இந்த உடல் மிக இன்றியமையாதது. இந்த உடலேடும் இயற்கை நிலை முக்தி நிலை, இறைநிலை அடைய முடியும்.

இதனைக் "கூண்டோடு கைலாசம்" என்ற சாதாரணச் சொற்றொடர் நமக்கு விளக்கிக் காட்டுகின்றது.

இங்குக் கண்ணகியின் நிலையை நீங்கள் நினைத்துப் பார்க்கலாம். "கட்புலங் காண விட்புலம் போயது. இறும்பூது போலும்" என்று பேசுகின்றார். இதனைத் தத்துவ நிலையில் "உருவமுக்தி" எனப் பேசுவார்கள்.

அதனால், துறவியர் உடலைப் பழித்துத் தாழ்ந்த நிலையில் கூறிக் கொண்டிருக்கின்றனர் என எண்ண வேண்டாம்.

## வேண்டுவேன் இந்த உடல்

**உடல், இறைநிலையை அணுகும்போது, அந்த நிலையில் எப்போதும் கர்ப்பூர வாசனையுடனேயே இருக்கும். தாயுமானவரின் உடல் பற்றிய கருத்தைக் கூறும் பாடல்களில் ஒன்றைப் பார்ப்போம்.**

**“உடலைப் பழித்து இங்கு உணவும் கொடாமல்**

**விடவிடவே நாடுவரோ மெய்யை - படபட என**

**வேண்டுவேன் இந்த உடல் மெய் உணராப் பொய்யன் நான்**

**ஆண்டநீ தானே அறி”**

**இதில் “வேண்டுவேன் இந்த உடல்” என்றே பேசுகின்றார்.**





**திருநாவுக்கரசர், “மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மானிலத்ததே” என்று பாடிய பாடலும் இங்கு நினைவு கூறத்தக்கது.**

மீண்டும் ஒரு பிறவி எடுக்க யாருக்காவது ஆசை இருக்குமா ?

'பிறவி துயர் கெட' என்பார் மணிவாசகர்.

'பிறவி பெருங்கடல்' என்பார் வள்ளுவர்.

---

'இன்னும் பிறக்க ஆசை கொண்டனையோ" என்று கேட்கிறார் பட்டினத்தடிகள்.

எல்லோரும் பிறவா வரம் தான் வேண்டுவார்கள். நாவுக்கரசர் மட்டும், இந்த மனித பிறவியும் வேண்டும் என்கிறார்.
எதற்கு ?

குனித்த புருவமும் கொவ்வைச்செவ் வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற் பாதமும் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவ தேஇந்த மாநிலத்தே.

இறைவனை அடையும் மட்டும் இந்த உடல் வேண்டும் என்பதே தாயுமானவர் எண்ணம்.

அறியாமை முழுவதையும் அகற்றி அறிவாய் நின்று ஆனந்தமும் பெற்று, குறியே இன்றி இருந்தால் இந்த உடல் வேண்டாம். அதுவரை இந்த உடலை வேண்டுவல் என்றே பேசுகின்றார்.







"அறிவில் அறியாமை அற்நறிவாய் நின்று

பிறிவற ஆனந்தமயம் பெற்றுக் - குறிய வீழ்ந்தால்

---

**அற்றைக்கு உடல் வேண்டாம் ஐயா இவ் வாழ்க்கையையே**

**எற்றைக்கும் வேண்டுவனே யான்"**

**நம் உடலைப் பயன்படுத்துகின்ற வழிகள் பல. உடலில் உள்ள உறுப்புக்களையும் இறைவனைக் காண, கேட்க, சுவைக்க, வழிபடப் பயன்படுத்துகின்றோம்.**

**அப்பரின் அங்கமாலை இங்கு நினைவு கொள்ளத்தக்கது. "கோளில் பொறியிலவ் குணமிலவே எண்குணத்தான் தாளை வணங்காத் தலை" எனக் கேளாத செவி போலவும் பார்க்க இயலாத கண் போலவும், வணங்காத, இறைவனுக்கு வணங்காத, தலை பயனற்றது எனப் பேசுகின்றார் திருவள்ளுவர்.**

**தாயுமானவர் மௌன நிலையில் நிருவிகற்ப சமாதி நிலையில் இருப்பதற்கு இந்த உடல் பயன்படவில்லை என்றால், இந்த உடலால் என்ன பயன் என்று கேட்கின்றார்.**

**நிருவிகற்ப சமாதி என்பது மூச்சோட்டத்தையும், நெஞ்சத் துடிப்பையும் நிறுத்தி, இறந்த பிணம் போன்று இருக்கின்ற நிலை, ஒன்றுமற்று அவ்வாறு இருக்க இயலுமா என்று கேட்டால், "ஆம்" என்பதே உண்மை.**

**ஆந்திராவில் "பாலயோகி" என்ற ஒருவர் இருந்திருக்கிறார். அரசின், ஆட்சியின் நேரடிப் பார்வையில் அவர் இருந்திருக்கிறார்.**

**ஊண் உறக்கம் ஒன்றும் கிடையாது. ஆண்டுக்கு ஒருமுறை, சிவராத்திரியில் அவரைப் பார்க்கலாம்.**

**இந்த நிலை பெற்றால் உடல் கர்ப்பூர மணத்தைப் பெறுகின்றது. இராமலிங்க சுவாமிகள் இந்த நிலை உடையவர் என்பதனைப் பலரும் அறிவார்கள்.**

**"ஏதுக்கு உடற்சுமை கொண்டேன் இருந்தேன் ஐயனே**

**ஆதிக்க மோன அருள்தாயே - சோதியாம்**

**மன்ன நிருவிகற்ப ஆனந்த நிட்டையிலே**

**பின்மற நில்லாத பின்,**

**சித்த நிருவிகற்பம் சேர்ந்தார் உடல்தீபம்**

**வைத்த கர்ப்பூரம்போல் வயங்கும் பராபரமே."**

**தாயுமானவர் இராமேசுவரத்திற்குச் சென்று போர்த்துக்கீசியரைத் தம் ஆன்ம பலத்தாலும் ஆட்பலத்தாலும், வென்ற பின்பு ஒரு மரம் அடர்ந்த சோலையில் இந்த நிருவிகற்ப சமாதியில் இருந்தார்.**

**அங்கு, மூச்சில்லை. பேச்சில்லை. ஒன்றுமற்ற நிலை. அவர் மீது மேலே நின்று மரத் தழைகள், செத்தைகள் வீழ்ந்து அவரை மூடிவிட்டன.**

**பழங் குப்பைகளாகிய செத்தைகளை எரித்தார்கள். எரித்த போது அவரும் சேர்த்து எரிக்கப்பட்டார்.**

**தாம் எரிந்ததை உணர்ந்தார் என்பது ஒரு சாரார் கூற்று. உணராது அந்த நிலையிலேயே சமாதி அடைந்தார் என்பது மற்றெரு சாரார் கூற்று.**

---

**உடலின் இழிநிலையைப் பல உவமைகளால் தாயுமானவர் விளக்குவதை நாம் உவமைகளின் வாயிலாக பல பாடல்களில் காணலாம்.**

**இந்த உடல் பொய் உடலே, ஒன்பது வாயில்களும் அழுக்கு நீரும் உடைய உடலே. இருப்பினும் இது தேவை.**

## பொய் உடலை மெய்என்று நம்பி

**“பொய் எல்லாம் ஒன்றாய் பொருத்தி வைத்த பொய் உடலை**

**மெய் என்றால் மெய்யாய் விடுமோ பராபரமே.**

**மின்அனைய பொய் உடலை மெய்என்று நம்பி ஐயோ**

**உன்னை மறக்க நெறயோ பராபரமே”**

**நித்தியம் என்று இல்லாத நீர்க்குமிழி போன்ற உடற்கு**

**இத்தனைதான் துன்பமும் உண்டோ பராபரமே.**

**“உண்டோ நமைப்போல வஞ்சர்- மலம்**

**ஊறித் ததும்பும் உடலை மெய்என்று**

**கொண்டோ பிழைப்பது இங்கு ஐயோ - அருள்**

**கோலத்தை மெய்என்று கொள்ள வேண்டாவோ?**

---

மேற்கு, கிழக்கு முதலிய திசைகளை உழக்கு என்னும்அளக்கும் கருவியில் முகப்பது போல, **எனப்** பல பாடல்களில் **உடலின் நிலையமை நினைக்கப்படுகின்றது. நிருவப்படுகின்றது.**

- ஐந்த பூதங்கள் ஒன்று கூட,
- அவற்றைக்கொண்டு கட்டப்பட்ட சிறிய இல்லத்தை,
- சன்னல்கள் ஒன்பதுடன் விளங்கும் நடமாடும் வீட்டை,
- துர் நாற்றம் வீசுகின்ற வெள்ளை நரம்பு வடக்கயிறாக எலும்பு, தசை முதலியன கொண்டு,
- மன்மதன் திருவிழா நடத்தச் செய்து அமைத்த சிறிய தேரினை,
- கோழை ஆகிய வெண்ணீரும், இரத்தமாகிய செந்நீரும், கண்களில் வடியும் கண்ணீரும்,
- கழிவாக வெளியேறும் சிறுநீரும், சீழ் எனப்படும் பண்ணீரும்
- ஆகிய இவற்றை இறைக்கும் இறைச்சியால் ஆகிய தோல் பையை,
- கரு என்னும் மருந்து உற்பத்தி செய்யும் கூட்டை,
- வெட்ட வெட்ட துளிக்கின்ற ஆசையாகிய மரம் வளரும் சுடுகாட்டை,
- மெய்போல இருந்து முடிவில் பொய்யாகும் உடம்பை,

நிலை இல்லாதது என்று உணர்ந்து. சிவஞானம் பெற்று இருப்பது என்றைக்கோ?

## தாயுமானவரின் அந்தப் பாடல்

குடக்கொடு குணக்காதி திக்கினை உழக்கூடு
  கொள்ளல்போல் ஐந்துபூதங்

---

கூடம் சுருங்கு இலைச் சாலேகம் ஒன்பது
    குலாவுநடை மனையை, நாறும்

வடக்கயிறு வெண்நரம் பா, என்பு தசையினால்
    மதிவேள் விழாநடத்த
வைக்கின்ற கைத்தேரை வெண்ணீர் செந்நீர் கணீர்
    மலநீர்புண் நீர் இறைக்கும்

விடக்குத் துருத்தியைக், கருமருந்துக் கூட்டை,
    வெட்டவெட் டத் தளிர்க்கும்
வேட்கைமரம் உறுகின்ற சுடுகாட்டை முடிவிலே
    மெய்போல் இருந்துபொய்யாம்

சடக்கைச், சடக்கெனச், சதம் என்று சின்மயம்
    தானாகி நிற்பது என்றோ?
சர்வபரி பூரண அகண்டதத் துவம் ஆன
    சச்சிதானந்தசிவமே. (**சச்சிதானந்தசிவம்** 2 -தா.பா.101.)

---



இந்தப் பாடலில் - யாக்கை நிலையாமைப் பற்றி நன்கு விளக்கியுள்ளார். உடலை விட்டு உயிர் பிரியும் போது உயிருக்கு உயிராக இருந்தவர்கள் உடன் செல்லமாட்டார்கள் என்ற நிலையை,

மனித வாழ்வு எவ்வளவு நிலையற்றது, அந்த நிலையற்ற வாழ்வை முழுவதும் உணர்ந்து கொள்ளாமல் ஒருவன் வாழும் குறுகிய காலத்தில் எவ்வளவு பாவச் செயல்களைப் புரிகிறான்? எவ்வளவு உணர்ச்சிக் கொந்தளிப்பில் தகாத செயல்களைப் புரிகிறான்?

ஆடிய ஆட்டம் என்ன?

பேசிய வார்த்தை என்ன?

தேடிய செல்வம் என்ன?

திரண்டதோர் சுற்றம் என்ன?

கூடுவிட்டு ஆவி போனால்

கூடவே வருவது என்ன?

கண்ணதாசன்  எவ்வளவு அழகாக் கேட்கிறார் பாருங்கள்…

சிவவாக்கியார் தரும் உடல் நிலையையாமைப் பாட்டையும் பாருங்கள்.

மண்கலம் வீழ்ந்த போது வைத்து வைத்து அடுக்குவார்
வெண்கலம் கவிழ்ந்த போது வேணும் என்று வேணுவார்
நன்கலம் கவிழ்ந்த போது நாறும் என்று போடுவார்
எண்கலந்து நின்ற மாயமய் என்ன மாயம் ஈசனே!

மண்பானை கவிழ்ந்து உடைந்து போனால் அது தேவைப்படும் என எடுத்து அடுக்கி வைப்பார்கள்.

வெண்கலப் பானை வீழ்ந்து நசுங்கிப் போனால் அது வேணும் என்று பாதுகாப்பார்கள்.

ஆனால் நமது உடம்பை விட்டு உயிர் போய் கிடக்கும் போது அதனைப் பிணம் என்று இகழ்ந்து அது கிடந்தால் நாறும் எனக் கூறி குழிவெட்டி அதனில் போட்டு மூடிவிடுவார்கள்.

---


இப்படி ஒரு காசுக்கும் கூட உதவாத என் எண்சாண் உடம்பில் நீ நின்று ஆடிய மாயம்தான் என்ன மாயயோ ஈசனே!

**உடலை வருத்தும் துறவு வாழ்க்கை தேவை என்பது தாயுமானவர் கருத்து அன்று. துறவால் வாழ்வு சிறக்கும் என்றும் அவர் பேசவில்லை. தானும் மெய்ப் பொருளை உணர்ந்த பின்பு, இல்லறத்திலிருந்து துறவுக்கு வந்தவர்.**

**தாயுமானவார் வாழ்ந்தது போல் மிக இனிமையான இல்வாழ்வு, அறவாழ்வு வாழ்தல் வேண்டும்.**

**அவ்வாறு வாழும்போதும், அதன் அழியும் தன்மைகளில் நாட்டம் கொள்ளலாகாது. ஆழ்ந்துவிடக் கூடாது.**

**மாறாக, என்றும் நின்று நிலைபெற்றுத் தன் தண் அருளைப் பொழிகின்ற, வெட்டவெளியான சுத்தவெளியின் ஆற்றலுடைய சக்தியை இடையறாது நினைத்துக் கொண்ருக்க வேண்டும் என்பதே தாயுமானவர் வேண்டுகோள்.**






---

கொந்து அவிழ் மலர்ச்சோலை நல்நிழல் வைகினும்.
குளிர்தீம் புனல்கைஅள்ளிக்
கொள்ளுகினும் . அந்த நீ ரிடைத்திளைத்து ஆடினுங்
குளிர்சந்த வாடைமடவார்

வந்துஉலவு கின்றதென மூன்றிலிடை உலவவே
வசதிபெறு போதும். வெள்ளை
வட்டமதி பட்டப் பகல்போல நிலவுதர
மகிழ்போதும் வேலைஅமுதம்

விந்தைபெற அறுசுவையில் வந்தது என அமுது உண்ணும்
வேளையிலும் மாலைகந்தம்
வெள்ளிலை அடைக்காய் விரும்பி வேண் டிய வண்ணம்
விளையாடி விழி துயிலினும்.

சந்ததமும் நின் அருளை மறவா வரந்தந்து
தமியேனை ரட்சைபுரிவாய்"

சர்வபரி பூரண அகண்டதத் துவம் அன
சச்சிதா னந்தசிவமே. (சச்சிதானந்தசிவம்.11 தா.பா.110)

இறைவன் உயிருக்கு உயிராய் இருக்கின்றார். "உயிருக்கு உயிராய் எந்நாளும் ஓங்கா நிற்பர். (ஆகார.14)

உயிர்களுடைய எண்ணிற்கு அளவில்லை ஆதலாலும், எண்ணிறந்த உயிர்கட்குத் தலைவன் இறைவன் ஒருவனே யாதலாலும், "அளவிலாத ஆருயிர்கட்கோருயிராய் அமர்ந்தாய்" (ஆசை.12) எனச் சுட்டுகின்றார்.

எல்லாத் தத்துவங்கட்கும் வேறாக நிற்கும் நம் உயிரினை நாம் அறிதல் தேவை என்பார் தாயுமானவர்.

"தத்துவமாம் பாழ்த்த சடவுருவைத் தான் சுமந்த

சித்துருவாம் எம்மைத் தரிசிப்பது எந்நாளோ? (எந்.தன்.3)

இதிலிருந்து தத்துவங்கள் யாவும் சடம் என்பதும், உயிர் அவற்றின் வேறாகிய அறிவுப் பொருள் என்பதும் தெரிகின்றன.

இறைவனை அடையும் மட்டும் இந்த உடல் வேண்டும் என்பதே தாயுமானவர் எண்ணம். தாயுமானவர் வழியைப் பின்பற்றி நாமும் இந்த உடல் இறைவனை அடையும் மட்டுமே என்று வாழ்வோமாக!

